# DEPOSITION OF WITNESS

## Crl.Misc.39
## (CHAPTER XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.3/2016

Deposition of witness for Prosecution – PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜெயகணேசன் | Caste | : | |
| S/o.W/o.D/o. | : | துரைராஜ் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 22.04.2024.

A1 & A2 present.

**முதல் விசாரணை:**

நான் நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், காந்திபுரம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் பேருந்தில் நடத்துனராக வேலை செய்து வருகிறேன். 22.12.2014 அன்று காலை 9.20 மணிக்கு சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து ராசிபுரம் செல்வதற்காக பயணிகளை ஏற்றிக்கொண்டு புறப்பட்டு சென்றேன். அந்த பேருந்தில் என்னுடன் அன்பழகன் என்பவர் ஓட்டுனராக

இருந்தார். அப்போது சந்தியூர் அருகில் காலை சுமார் 9.50 மணிக்கு TN 29 AK 6428 என்ற டிப்பர் லாரியில் மணல் ஏற்றிக்கொண்டு நாமக்கல்லிருந்து சேலம் நோக்கி வந்தபோது சென்டர் மீடியனில் இடித்து ராங் சைடில் வந்து எங்கள் பேருந்தின் இடதுபுறம் சைடில் மோதி பேருந்திற்கு சேதம் ஏற்பட்டது. எங்கள் பேருந்திற்கு இடதுபுறம் வந்த பைக்கில் கணவன், மனைவி, குழந்தை மீது மோதி காட்டிற்குள் போய் நின்றது. அதனால் பேருந்தில் பயணம் செய்த 2 பேர் இறந்துவிட்டார்கள். பைக்கில் வந்த கணவன், மனைவி இருவரும் இறந்துவிட்டார்கள். எனக்கு லேசாக முதுகில் அடிபட்டது. ஓட்டுனர் அன்பழகனுக்கு இடதுபக்க காலில் அடிபட்டது. இறந்தவர்களை பற்றி விசாரித்தபோது அவர்கள் அலமேலு மற்றும் பூர்ணிமா என்று தெரிந்து கொண்டேன். இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் பெயர் சரோஜா மற்றும் ராஜா ஆகும். லாரியின் க்ளீனர் குமாரும் இறந்துவிட்டார். பைக்கில் வந்த குழந்தையும் பின்னர் இறந்துவிட்டது. பின்னர் 10.45 மணி அளவில் மல்லூர் காவல்நிலையம் சென்று நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் அளித்த புகார் ஆகும். புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். ஆஜர் 1வது எதிரிதான் சம்பவத்தின்போது லாரியை ஓட்டி வந்தவர் ஆவார். 2வது எதிரி பற்றி எனக்குத் தெரியாது. குணசேகரன் என்ற காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

சேலம் புதிய பஸ் நிலையத்திலிருந்து சந்தியூர் எவ்வளவு கிலோமீட்டர் இருக்கும் என்றால் 13 கிலோமீட்டர் இருக்கும். புதிய பஸ்நிலையத்திலிருந்து சந்தியூருக்கு இடையே எவ்வளவு பஸ்நிறுத்தங்கள் உள்ளது என்றால் சீலநாயக்கன்பட்டி மற்றும் மல்லூர் பஸ்நிறுத்தங்கள் உள்ளன. புதிய பஸ் நிலையத்திலிருந்து சீலநாயக்கன்பட்டி பைபாஸ் போகும்வரை போக்குவரத்து மிகவும் அதிகமாக இருக்கும் என்றால் மிகவும் போக்குவரத்து நெரிசல் இருக்காது. சந்தியூர் பிரிவு ரோடு சேலம், நாமக்கல் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து வலது பக்கமாக பிரிந்து செல்லும் ரோடு என்றால் சரி. வலதுபக்கமாக பிரிந்த செல்லும் அந்த இடத்தில்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரி. சம்பவத்தன்று பேருந்தில் எவ்வளவு பயணிகள் இருந்தார்கள் என்றால் 45 பயணிகள் இருந்தார்கள். சம்பவம் நடந்த பிறகு ஆம்புலன்சுக்கு நான் தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை. பயணிகள் கொடுத்தார்கள். ஆம்புலன்ஸ் வந்த போது சம்பவ இடத்தில் நான் இருந்தேனா என்றால் இருந்தேன். நான் ஆம்புலன்ஸ் வரும் வரை அங்கிருந்தபோது காவலர்கள் யாரும் வரவில்லையா என்றால் வரவில்லை. ஆம்புலன்சில் அடிபட்டவர்களை எங்கெங்கு அழைத்து சென்றார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரி. ஆனால் ஆம்புலன்சில் அழைத்து சென்றார்கள். காவல் ஆய்வாளர் குணசேகரன் என்னை விசாரித்தாரா என்றால் ஆம். புகார் மனுவை சம்பவ இடத்தில் கொடுத்தேனா இல்லை. காவல்நிலையத்தில் கொடுத்தேன். புகாரில்

என்னிடம் கையெழுத்து மட்டும் வாங்கிக்கொண்டார்கள் என்றும் புகார் நான் சொல்லி எழுதப்படவில்லை என்றும் அதிலுள்ள சங்கதிகள் பொய்யானது என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் புகார் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கும் லாரியை ஓட்டி வந்தவருக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.